ISSN: 2582–5518




# புதுகை வரலாறு நாளிதழ்




WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351

வியாழன் ❖ ஆகஸ்ட். 10, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 307 ❖ ரூ.10

### “மணிப்பூர் வன்முறை மீதான ‘அரசியல்’ வெட்கக் கேடானது”

# கொந்தளிப்பு

## பிரதமர் மோடி நாள்தோறும் 17 மணி நேரம் தொடர்ச்சியாக உழைக்கிறார் ஒருநாள்கூட அவர் விடுப்பு எடுத்துக்கொண்டது கிடையாது; மக்களவையில் அமித் ஷா

புதுடெல்லி , ஆக.10–

“பிரதமர் நரேந்திர மோடி மீது நாட்டு மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்” என்று மக்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார். அத்துடன், மணிப்பூர் வன்முறை மீது நடைபெறும் அரசியல் வெட்கக் கேடானது என்றும் எதிர்க்கட்சிகளை அவர் காட்டமாக விமர்சித்தார்.

மணிப்பூர் விவகாரத்தில், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீது மக்களவையில் நேற்று நடந்த விவாதத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உரையாற்றினார். அப்போது அவர் கூறியது: "பிரதமர் மோடி மீது, இந்த அரசு மீது நம்பிக்கை போய்விடவில்லை. மாய தோற்றத்தை உருவாக்க வேண்டும்என்பதற்காகவே எதிர்க்கட்சிகள் நம்பிக்கை இல்லா தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளனர். எதிர்க்கட்சிகளின் உண்மையான குணம் என்ன என்பதை இந்த நம்பிக்கையில்லாதீர்மானம் அம்பலப்படுத்தும்.

அரசைப் பாதுகாக்க ஊழல் செய்வது என்பதுதான் முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் குணம். சுதந்திரத்துக்குப்பிறகுமிகப் பெரிய அளவில் நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்ற பிரதமர் என்றால், அவர்நரேந்திரமோடிதான். மக்கள் மத்தியில் பிரதமர் மோடிக்கு மிகப் பெரிய புகழ் இருக்கிறது. நாட்டு மக்களுக்காக அவர் ஓய்வின்றி உழைக்கிறார். நாள்தோறும் 17 மணி நேரம் தொடர்ச்சியாக அவர் உழைக்கிறார்.



ஒருநாள்கூட அவர்விடுப்பு எடுத்துக்கொண்டது கிடையாது. மக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

இந்த நம்பிக்கை இல்லா தீர்மானம் என்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது. இந்த அரசு என்னவெல்லாம் செய்திருக்கிறது என்பதை நான்இப்போதுகூறுகிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்வோம் என்று கூறுவதையே வழக்கமாகக் கொண்டகூட்டணிஐக்கிய முற்போக்குக் கூட்டணி. வெறும் கடனை தள்ளுபடி செய்வதில் எங்களுக்கு நம்பிக்கைஇல்லை.மாறாக, கடன் வாங்க வேண்டிய தேவைஏற்படாதநிலையை உருவாக்குவதற்கான அமைப்பு முறையை நாங்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

நாங்கள் விவசாயிகளுக்குக் கொடுத்திருப்பது இலவசங்கள்அல்ல.மாறாக, அவர்கள்தங்களைதற்சார்பு அடையச் செய்வதற்கான நடவடிக்கை. மோடி அரசு வரலாற்றுச் சிறப்பு மிக்க சில முடிவுகளை எடுத்து, வாரிசு அரசியலுக்கும் ஊழலுக்கும் முடிவு கட்டி இருக்கிறது. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் குணம் என்பது அதிகாரத்தைப்பாதுகாக்க வேண்டும் என்பதுதான்.

ஆனால், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி, கொள்கைகளைப் பாதுகாக்கபோராடுகிறது.

அனைவருக்கும்வங்கிக் கணக்கு திட்டத்தை காங்கிரஸ் ஏன் எதிர்த்தது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.ஏழைகளுக்காக மத்திய அரசு ஒரு ரூபாய் வழங்கினால் அதில் 15 பைசாதான் அவர்களைச் சென்றடைகிறது என பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி சொன்னார். ஆனால், இன்று முழு தொகையும் ஏழைகளைச் சென்றடைகிறது" என்றார் அமித் ஷா.

பிரதமர் மோடி மணிப்பூருக்கு ஏன் செல்லவில்லை என்ற கேள்வியைஎதிர்க்கட்சிகள் தொடர்ந்து முன்வைத்து வரும் சூழலில் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா,“பிரதமர்மோடி கடந்த 9 ஆண்டுகளில் 50-க்கும் மேற்பட்ட முறைகள் வடகிழக்கு மாநிலங்களுக்குச் சென்றுள்ளார். இதுவே வடகிழக்கு மாநிலம் நம் நாட்டின்அங்கம்என்பதை நிரூபித்துவிடவில்லையா? எதிர்க்கட்சிகள்வடகிழக்கு மாநிலங்கள் விஷயத்தில் எங்களைக் கேள்விக் கேட்கின்றன. ஆனால் அவர்கள் வடகிழக்கு மாநிலங்களுக்காக இதுவரை என்ன செய்தார்கள்?” என்று வினவினார்.

தொடர்ந்து பேசிய அவர்“மணிப்பூர்வன்முறை கவலையளிக்கிறது.ஆனால், அதன் மீது நடைபெறும் அரசியல் வெட்கக் கேடானது. மணிப்பூரில் அதீத வன்முறை நடந்துவிட்டதாக எதிர்க்கட்சிகள் கூறுவதை ஏற்றுக் கொண்டாலும் கூட எதிர்க்கட்சிகளின் எதிர்வினைஅதிகவேதனை அளிக்கிறது. இதுபோன்ற சம்பவங்கள்நடந்தமைக்கு நாம் ஓர் ஒட்டுமொத்த சமூகமாகத்தான் வெட்கப்பட வேண்டும். அதில் அரசியல் ஆதாயம் தேடக் கூடாது” என்றார்.

உள்நாட்டுப் பாதுகாப்புக்கு பாஜக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பட்டியலிட்ட அமித் ஷா, “நாடு முழுவதும் 90-க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனை நடத்திய நாங்கள் பாப்புலர்ஃபிரன்ட்ஆஃப் இந்தியா அமைப்பை தடை செய்துள்ளோம். லண்டன், ஒட்டாவா, சான் ப்ரான்சிஸ்கோ போன்ற நகரங்களில் இந்தியத் தூதரங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை நாங்கள் தடுத்துள்ளோம். 2011-ல் நடந்த மும்பை தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடையதஹாவூர் ஹுசைன் விரைவில் இந்தியாவில் நீதியின் முன் நிறுத்தப்படும் சூழலை உருவாக்கியுள்ளோம்” என்றார் அவர்.

முன்னதாக, மணிப்பூரை இந்தியாவின் பகுதியாக பிரதமர் மோடி கருதவில்லை என்றும், மணிப்பூரில் இந்தியாவை பாஜக கொன்றுவிட்டது என்றும் மக்களவையில் வயநாடு எம்.பி. ராகுல் காந்தி காட்டமாக பேசினார்.




▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழரவில், அம்மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் மடிக்கணினிகளை வழங்கி வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கய்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, இல்லம் தேடிக் கல்வி சிறப்புப் பணி அலுவலர் இளம்பகவத், சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் இயக்குநர் வி. காமகோடி, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா. சுதன் மற்றும் அரசு உயர் அலுவர்கள் கலந்து கொண்டனர்.

### அறந்தாங்கி அருகே வைரிவயல் கண்மாயில்

## சாக்கடை நீர் கலப்பதால் 120 ஏக்கர் நிலம் விவசாயம் செய்ய முடியாமல் பாதிப்பு

அறந்தாங்கி, ஆக.10–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே உள்ள ரெத்தினக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட வைரிவயல் கிராமத்தில் 120 ஏக்கர் பரப்பளவில் விவசாய நிலம் உள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அறந்தாங்கி நகர்பகுதியில் இருக்கக்கூடிய சாக்கடை கழிவுநீர் வைரிவயல் கிராமத்தில் உள்ள விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் கண்மாயில் கலப்பதால் இந்த நீரை விவசாய நிலங்களுக்கு பயன்படுத்த முடியாமலும் மேலும் இந்த கண்மாய் நீரை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு நோய் தொற்று மற்றும் அரிப்பு போன்ற நோய்கள் பரவி வருவதாகவும் வேதனை தெரிவிக்கின்றனர். இதனால் அதிர்ச்சி அடைந்த வைரிவயல்



கிராம பொதுமக்கள் பலமுறை நகராட்சி அதிகாரிகளுக்கு மனு அளித்துள்ள நிலையில் வட்டாட்சியர் தலைமையில் சமாதான கூட்டம் நடத்தப்படப்பட்டுள்ளது.

அந்த சமாதான கூட்டத்தில் ஓராண்டில் சரி செய்து விடுகிறோம் என நகராட்சி அதிகாரிகள் உறுதியளித்ததின் பேரில் விவசாயிகள் விளை நிலத்தில் விவசாயம் செய்யாமல் காத்திருந்தனர், ஆனால் தொடர்ந்து நகராட்சி அதிகாரிகள் மற்றும் மாவட்ட நிர்வாகம் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதால் விவசாயிகள் வேதனையில் இருக்கின்றனர்.

குறிப்பாக விவசாயத்தையே வாழ்வாதாரத்தை நம்பி இருக்கக்கூடிய இப்பகுதி மக்களின் விவாசாய நிலங்கள் வறண்ட நிலமாக காட்சி அளிக்கிறது. இது தொடர்பாக அப்பகுதி பொதுமக்கள் கூறுகையில், தங்கள் கண்மாயில் கடல் போல் நீர் இருந்தாலும் அதை பயன்படுத்த முடியாமல் இருக்கின்றோம் குறிப்பாக ஆடு,மாடு உள்ளிட்ட கால்நடைகளை அவிழ்த்து விடவும் மிகவும் அச்சப்படுகின்றோம்.இந்த நீரை அருந்தி மாடுகள் நோய்வாய்ப்பட்டு இறக்கின்றது.

அதுமட்டுமின்றி இந்த நீரை விவசாயத்திற்கு பயன்படுத்தும் போது பயிர்கள் அழுகி கருகி விடுவதாகவும் அரிப்பு அலர்ஜி உள்ளிட்ட பல நோய்கள் உண்டாகி இறப்பு ஏற்படும் வாய்ப்பு இருக்கின்றது ஆகவே அரசு உடனடியாக சரிசெய்து கொடுக்க வேண்டும் என கோரிக்கைவைக்கின்றனர்.

அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மிகப்பெரிய போராட்டம் நடத்த உள்ளோம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்

## என்எல்சி ஏற்படுத்திய பாதிப்புகளை ஆய்வு செய்ய மத்திய, மாநில அரசுகளுக்கு அன்புமணி வலியுறுத்தல்

சென்னை , ஆக.10–

"என்எல்சி நிறுவனத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து தனியார் தொண்டு நிறுவன ஆய்வில் அதிர்ச்சியூட்டும் உண்மைகள் வெளிவந்துள்ள நிலையில், இனியும் தாமதிக்காமல் சென்னை ஐஐடி மூலம் ஆய்வு நடத்த மத்திய, மாநில அரசுகள் முன் வரவேண்டும்" என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடலூர் மாவட்டத்தில் என்எல்சி மற்றும் பரங்கிப்பேட்டை தனியார் அனல் மின் நிலையம் பகுதிகளில் பூவுலகின் நண்பர்கள், மந்தன் அத்யயன் கேந்திரா ஆகிய தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்ட ஆய்வில் மண் மற்றும் நிலத்தடி நீரின் பாதிப்புகள் குறித்து அதிர்ச்சியூட்டும் உண்மைகள் தெரியவந்துள்ளன.

தமிழக அரசால் மூடப்பட்ட தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உருக்காலையால் அப்பகுதியின் சுற்றுச்சூழலுக்கு எத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டனவோ, அதைவிட பலமடங்கு அதிக பாதிப்புகள் என்எல்சியால் ஏற்பட்டிருக்கின்றன என்பதுஆய்வுமுடிவுகளின் மூலம் தெரியவந்துள்ளது. தமிழகத்தை விட்டு என்எல்சி நிறுவனத்தை வெளியேற்ற வேண்டும் என்ற பாமகவின் கோரிக்கை மிகவும் நியாயமானது, சரியானது என்பதை இந்த ஆய்வு முடிவுகள் நிரூபிக்கின்றன.

மண் மற்றும் நிலத்தடி நீரின் தரம் குறித்து ஆய்வு நடத்தப்பட்ட 31 இடங்களில் 17 இடங்களில் நிலத்தடி நீரின் தரம் மிக கடுமையாகவும், 11 இடங்களில் குறிப்பிடத்தக்க அளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன. வடக்கு வெள்ளூர் என்ற கிராமத்தில் நிலத்தடி நீரில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட 250 மடங்கு அதிகமாக பாதரசம் கலந்திருப்பது தெரியவந்துள்ளது. ஆய்வு நடத்தப்பட்ட 90% வீடுகளில் உள்ளவர்களில் எவரேனும் ஒருவருக்கு சிறுநீரகம் தோல் மூச்சுத் திணறல் போன்ற பாதிப்புகள் ஏற்பட்டு இருக்கிறது உறுதியாகியுள்ளது. என்எல்சி நிறுவனம் எத்தகைய தீமைகளை ஏற்படுத்தி வருகிறது என்பதற்கு இதுவே சான்று.

என்எல்சி நிறுவனத்தின் சுரங்கம் மற்றும் அனல் மின் நிலையங்களால் கடலூர் மாவட்ட மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் எந்தெந்த வழிகளில் எல்லாம் சரி செய்ய முடியாத அளவுக்கு பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பது குறித்துதொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். கடலூர் மாவட்டம் முழுவதும் சுரங்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை மத்திய அரசே ஒப்புக்கொண்டிருக்கிறது. கடலூர் மாவட்டத்தில் உள்ள 30 லட்சம் மக்களும் என்எல்சியால் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தான் பாமகவின் குற்றச்சாட்டு ஆகும்.

என்எல்சியின் சுரங்கங்கள் மற்றும் அனல் மின் நிலையங்களால் அப்பகுதியில் வாழும் மக்களின் உடல் நலனுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து விரிவான ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்று 2022-ம் ஆண்டு மே மாதம் சென்னையில் உள்ள தென்மண்டல பசுமை தீர்ப்பாயம் ஆணையிட்டது. ஆனால் அதன்பின் 15 மாதங்கள் ஆகிவிட்ட நிலையில் இன்று வரை எந்த ஆய்வும் நடத்தப்படவில்லை. என்எல்சியால் மண்ணுக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட பாதிப்புகள் வெளிவராமல் தடுக்கும் முயற்சியாகவே இதை பார்க்க வேண்டியுள்ளது. பாதிப்புகளை மூடி மறைப்பது மேலும் மோசமான விளைவுகள் ஏற்படுவதற்கே வழிவகுக்கும்.

என்எல்சி சுரங்கங்கள் அமைக்கப்பட்டு 66 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் எந்த ஆய்வுமே இல்லாமல் வெளிப்படையாகவே தெரிகின்றன. ஆனாலும் கூட என்எல்சி நிறுவனத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து ஆய்வு நடத்த மத்திய, மாநில அரசுகள் முன் வரவில்லை. தனியார்தொண்டுநிறுவன ஆய்வில் அதிர்ச்சியூட்டும் உண்மைகள் வெளிவந்துள்ள நிலையில், இனியும் தாமதிக்காமல் சென்னை ஐஐடி மூலம் ஆய்வு நடத்த மத்திய, மாநில அரசுகள் முன் வரவேண்டும். என்எல்சியால் மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது ஆய்வில் உறுதி செய்யப்பட்டால் அதனடிப்படையில் என்எல்சி நிறுவனத்தை உடனடியாகவெளியேற்ற வேண்டும்" என்று அவர் கூறியுள்ளார்.

## புதுச்சேரியில் காலி பணியிடங்களை நிரப்பாததால் அரசு மருத்துவமனையில் செவிலியர்கள் போராட்டம்

புதுச்சேரி , ஆக.10–

காலி பணியிடங்களை புதுச்சேரி அரசு நிரப்பாததால் இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனையில் இரண்டு மணி நேரம் பணிகளைப் புறக்கணித்து செவிலியர்கள் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தினால் வார்டுகளில் சிகிச்சை பெறுவதில் தாமதம் ஏற்பட்டு நோயாளிகள் காத்திருந்தனர். இந்தப் போராட்டத்துக்கு ஆளும் அரசின் கூட்டணிக் கட்சியான அதிமுக ஆதரவு தெரிவித்துள்ளது.

புதுச்சேரி அரசு செவிலிய அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் செவிலிய அதிகாரிகளின் பணிச்சுமையை குறைக்கும் வகையில் காலியாக உள்ள செவிலிய அதிகாரி பணியிடங்களை நிரப்ப வேண்டும், பதவி மறுசீரமைப்பு செய்ய வேண்டும், புதிய செவிலிய அதிகாரிகள் பணியிடங்களை உருவாக்க வேண்டும், ஒப்பந்த செவிலிய அதிகாரிகளை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் உட்பட



கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக நேற்று இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனையில் காலை 8 மணி முதல் 10 மணி வரை 2 மணி நேரம் பணிகளை புறக்கணித்து வெளிநடப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு அரசு செவிலிய அதிகாரிகள் சங்கத் தலைவர் சுனீலா குமாரி தலைமை தாங்கினார். நிர்வாகிகள் ஜெரோம் சியாமளா, ஸ்டெல்லா, சந்தான லட்சுமி, அமுத சரஸ்வதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட நிர்வாகிகள் கூறுகையில், “காலி பணியிடங்கள் அதிகரித்துள்ளன. அரசை பலமுறை அறிவுறுத்தியும் நிரப்பவில்லை. அதனால், இரண்டு மணி நேர பணி புறக்கணிப்பு போராட்டத்தை துவக்கியுள்ளோம். அடுத்து வரும் 11-ம் தேதி குழந்தைகள் மருத்துவமனையில் போராட்டம் நடத்தவுள்ளோம்" என்றனர்.

இப்போராட்டத்துக்கு ஆளும் அரசின் கூட்டணிக் கட்சியான அதிமுக ஆதரவு தெரிவித்துள்ளது. அக்கட்சியின் மாநிலச் செயலர் அன்பழகன் போராட்டத்தில் பங்கேற்றார். அவர் கூறுகையில், "சுகாதாரத் துறையில் நீண்ட காலமாக காலியாக உள்ள சுமார் 700-க்கும் மேற்பட்ட செவிலியர் பணியிடங்களை நிரப்பவில்லை. பணியில் உள்ள செவிலியர்கள் பணி சுமையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப்போராட்டம்அரசின் தொடர் அலட்சியத்தால் செவிலியர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. மருத்துவ விதிப்படி 5 நோயாளிகளுக்கு ஒரு செவிலியர் பணி செய்ய வேண்டும். ஆனால், 40 நோயாளிகளுக்கு ஒரு செவிலியர் தற்போது பணி செய்கின்றனர். 10 ஆண்டுகளாக செவிலியர் எண்ணிக்கை அதிகப்படுத்தவில்லை" என்று குறிப்பிட்டார்.

நோயாளிகள் பாதிப்பு: போராட்டத்தின் காரணமாக அரசு மருத்துவமனையில் பணிகள் பாதிக்கப்பட்டன. நோயாளிகள் சிகிச்சை பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. காத்திருந்து நோயாளிகள் சிகிச்சை பெற்றனர்.

# இன்று

# 10-8-2023

சக வருடம் 1945 சிராவணம் 19

| சோபகிருது ஆடி 25 | AUG - THU வியாழன் | முஹர்ரம் 22 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | தேய்பிறை 222 / 143 | |

தேய். நவமி 07.29 (கா. 09.04) கார்த்திகை 04.10 (கா. 07.44) தியாஜ் 45.28 அகஸ் 30.58 மரண. திருத்தணி முருகப்பெருமான் தெப்பம். இருக்கன்குடி மாரியம்மன் பவனி. திருப்பதி ஏழுமலையப்பன் புஷ்பாங்கி சேவை. சுவாமி மாலை முருகப்பெருமான் தங்கக் கவசம் வைரவேல் தரிசனம்.

| நல்லநேரம் | | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 10.45-11.45 | 12.15-1.15 | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை | ———— | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |

சூலம் : தெற்கு; பரிகாரம் : தைலம்; கடக லக்கனம் இருப்பு நா. 1 வி. 22; சந்திராஷ்டமம் சுவாதி; கரணம் : 3-4.30; சூரிய உதயம் : 6.04

எலி வளையானாலும் தனி வளை வேண்டும்

இராசிபலன்: மேஷம் - அச்சம்; ரிஷபம் - சுகம்; மிதுனம் - ஆக்கம்; கடகம் - சலனம்; சிம்மம் - ஆர்வம்; கன்னி - சிரமம்; துலாம் - ஊக்கம்; விருச்சி - நலம்; தனுசு - நிறைவு; மகரம் - இரக்கம்; கும்பம் - வெற்றி; மீனம் - புகழ்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# பொது சிவில் சட்டத்துக்கு எதிராக கேரள சட்டப்பேரவையில் தீர்மானம்



**திருவனந்தபுரம், ஆக. 10–**

பொது சிவில் சட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தக் கூடாது என கேரள சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாட்டில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவது தொடர்பாக பல தரப்பினரிடம் இருந்து சட்ட ஆணையம் கடந்த மாதம் ஆலோசனைகளை பெற்றது. இந்நிலையில் பொது சிவில் சட்டத்துக்கு பலர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். பொது சிவில் சட்டம் அமல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மிசோரம் சட்டப்பேரவை கடந்த பிப்ரவரி மாதம் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியது.

இந்நிலையில் இதேபோன்ற ஒரு தீர்மானத்தை கேரள சட்டப்பேரவையில் முதல்வர் பினராயி விஜயன் செவ்வாய்கிழமை தாக்கல் செய்தார். இதை வரவேற்ற எதிர்க்கட்சியான காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (யுடிஎஃப்), தீர்மானத்தில் பல திருத்தங்கள் மற்றும் மாற்றங்களை கொண்டு வர ஆலோசனை கூறியது. அதன்படி இறுதி செய்யப்பட்ட தீர்மானத்தை சட்டப்பேரவையில் முதல்வர் பினராயி விஜயன் வாசித்தார்.

அப்போது அவர் பேசியதாவது: சங் பரிவார் கூறுவது போன்ற பொது சிவில் சட்டம் அரசியல் சாசனத்தில் இல்லை. அது மனுதர்ம சாஸ்திர அடிப்படையில் உள்ளது. அரசியலமைப்பு சட்டத்தில் உள்ள ஒன்றை அமல்படுத்த சங் பரிவார் முயற்சிக்கவில்லை. முஸ்லிம் தனிநபர் சட்டத்தின்கீழ் உள்ள விவாகரத்து சட்டங்களில், குற்றம் கண்டுபிடிக்கும் ஆளும் பாஜக அரசு, பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய எதுவும் செய்யவில்லை. அவர்களின் நலனுக்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மத்திய அரசு அமல்படுத்த முயலும் பொது சிவில் சட்டம் ஒருதலைபட்சமானது மற்றும் அவசர நடவடிக்கை. இதுநாட்டின் மதச்சார்பற்ற தன்மையை குலைக்கும். அதனால் இந்த பொது சிவில் சட்டம் குறித்து சட்டப்பேரவை கவலை கொள்கிறது.

நெறிமுறை அடிப்படையில் மட்டுமே பொது சிவில் சட்டத்தை கொண்டு வரலாம் என அரசியலமைப்பு சட்டம் கூறுகிறது. இது கட்டாயம் அல்ல. அரசியலமைப்பு சட்டம் 25-வது பிரிவின் கீழ் மத சுதந்திரத்துக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இதில் மத அடிப்படையிலான தனி விதிமுறைகளை பின்பற்றும் உரிமை உள்ளது. இதை தடுக்கும் எந்த சட்டமும், அரசியலமைப்பு சட்ட உரிமையை மீறுவதாகும்.

பொது சிவில் சட்டத்தை ஏற்படுத்த மாநிலங்கள் முயற்சிக்கலாம் என்றே அரசியலமைப்பு சட்டத்தின் 44-வது பிரிவு கூறுகிறது. இதுபோன்ற எந்த நடவடிக்கையும், விவாதங்கள் மூலம் மக்களின் ஒருமித்த கருத்துப்படி ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படாதது கவலை அளிக்கிறது.

பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவது மதச்சார்பற்ற நடவடிக்கைக்கு எதிரானது, இது நாட்டு மக்களின் ஒற்றுமைக்கு எதிரான நடவடிக்கை. சட்டப்பேரவை அளவிலான விவாதத்திலேயே, பொது சிவில் சட்டம் குறித்து மாறுபட்ட கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. பொதுவான சிவில் சட்டத்தை கொண்டுவர நாடாளுமன்றம் முயற்சிக்கலாம் என்றுதான் சட்டமேதை பி.ஆர். அம்பேத்கர் கூறினார். ஆனால், இதை கட்டாயம் கொண்டு வர வேண்டும் என அவர் வலியுறுத்தவில்லை. பொது சிவில் சட்டத்தை கொண்டுவருவதற்கு சாத்தியங்கள் உள்ளது என்று மட்டும்தான் அவர் குறிப்பிட்டார். இவ்வாறு அவர் கூறினார்.

பொது சிவில் சட்டத்துக்கு எதிராக கேரளாவில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சி கூட்டணியும், மற்றும் இதர மத அமைப்புகளும் பிரச்சாரங்கள் மேற்கொண்டு வந்தன. இந்நிலையில் பொது சிவில் சட்டத்துக்கு எதிரான தீர்மானத்தை கேரள அரசு சட்டப்பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளது.

# ஜி–20 மாநாட்டில் உக்ரைன் போர்தான் முக்கிய தலைப்பாக இருக்கும் அமெரிக்கா



**அமெரிக்கா , ஆக. 10–**

ஜி-20 மாநாட்டில் உக்ரைன் போர்தான் முக்கிய தலைப்பாக இருக்கும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

இந்தியாவின் தலைநகர் டெல்லியில் அடுத்த மாதம் ஜி-20 மாநாடு நடைபெறுகிறது. இதில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பங்கேற்க இருக்கிறார்கள். இந்த ஜி-20 மாநாட்டில் உக்ரைன் மீது ரஷியா தாக்குதல் நடத்தி வருவதுதான் முக்கிய தலைப்பாக இருக்கும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. ”எங்களுடைய கூட்டணி நாடுகளுடன் நடைபெறும் உரையாடலில் உக்ரைன் போர் குறித்ததுதான் முக்கிய தலைப்பாக இருக்கும். இனிவரும் உரையாடல்களில் இதற்குதான் முக்கியத்துவம். ஜி-20 மாநாட்டில் இது உண்மையாக இருக்கும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை'' என அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் மேத்யூ மில்லர் தெரிவித்துள்ளார்.

ரஷியா உக்ரைன் மீது தாக்குதல் தொடங்கிசுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்னும் போர் முடிவுக்கு வரவில்லை. தற்போது டிரோன் தாக்குதல் அதிகரித்துள்ளது. உக்ரைன் தானிய ஏற்றுமதி செய்ய முடியாத அளவிற்கு ரஷியா முட்டுக்கட்டை போட்டு வருகிறது. இது உலகளவில் தானிய தட்டுப்பாட்டிற்கு வழிவகுக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.




# இம்ரான்கான் தேர்தலில் போட்டியிட 5 ஆண்டு தடை விதித்தது பாகிஸ்தான் தேர்தல் ஆணையம்



**இஸ்லாமாபாத் , ஆக. 10–**

இம்ரான் கான் பிரதமராக இருந்த காலத்தில் ஊழல், மோசடியில் ஈடுபட்டதாக அவர்மீது பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன. மேலும் தேர்தல் ஆணையம் அளித்த புகாரின் பேரில் தோஷகானா ஊழல் வழக்கும் பதிவு செய்யப்பட்டது.

பாகிஸ்தான் சட்டத்தின்படி பதவிக்காலத்தில் பெறப்பட்ட பரிசுப்பொருட்களை மந்திரி சபையில் உள்ள தோஷகானா என்ற துறையிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால் அந்த பொருட்களை விற்று இம்ரான்கான் தனது சொத்தாக மாற்றியதாக குற்றம் சாட்டப்பட்டது. இதுவே தோஷகானா வழக்கு என அழைக்கப்படுகிறது. இந்த வழக்கு தொடர்பான விசாரணையில் இம்ரான் கான் மீதான குற்றம் உறுதி செய்யப்பட்டு அவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து இஸ்லாமாபாத் செசன்ஸ் கோர்ட்டு உத்தரவிட்டது. நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட அவர், பஞ்சாப் மாகாணம் அட்டோக் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தேர்தலில் போட்டியிட 5 ஆண்டுகள் தடை விதித்து அந்நாட்டு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. நம்பிக்கையில்லா தீர்மானத்தில் தோல்வியை தழுவிய இம்ரான்கான் பிரதமர் பதவியை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சக்கர நாற்காலியில் மாநிலங்களவைக்கு வந்தார் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்



**புதுடெல்லி, ஆக. 10–**

டெல்லி அரசு உயர் அதிகாரிகளை கட்டுப்படுத்த வகை செய்யும் அவசர சட்டத்தை மத்திய அரசு கடந்த மே 19-ம் தேதி பிறப்பித்தது. இந்த அவசர சட்டத்துக்கு மாற்றாக டெல்லி தேசிய தலைநகர் பிராந்திய அரசு (திருத்த) மசோதா மக்களவையில் கடந்த 3-ம் தேதி நிறைவேறியது. இது டெல்லி அரசின் உயர் அதிகாரிகள் நியமனம் மற்றும் பணியிட மாற்றம் செய்யும் அதிகாரத்தை துணைநிலை ஆளுநருக்கு வழங்குகிறது.

இதையடுத்து இந்த மசோதா மாநிலங்களவையில் திங்கள்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா மீது விவாதம் நடைபெற்றது. காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இந்த மசோதாவை எதிர்த்து பேசினர். 6 மணி நேர விவாதத்துக்குப் பிறகு மசோதா மீது வாக்கெடுப்பு நடைபெற்றது. மாநிலங்களவையில் காலியிடங்கள் போக இப்போதைய உறுப்பினர்கள் எண்ணிக்கை 238 ஆக உள்ளது. இதில் 233 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்றனர். மசோதாவுக்கு ஆதரவாக 131 வாக்குகளும் எதிராக 102 வாக்குகளும் பதிவானது. இதையடுத்து, 29 வாக்குகள் வித்தியாசத்தில் மசோதா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து இந்த மசோதா குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் தலைமையிலான பிஜு ஜனதா தளம் மற்றும் ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி தலைமையிலான ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த தலா 9 உறுப்பினர்கள் மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாநிலங்களவை உறுப்பினராக உள்ள முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் (90) உடல்நலக்குறைவு காரணமாக இந்த கூட்டத் தொடரில் பங்கேற்கவில்லை. எனினும், டெல்லி மசோதா மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்வதற்காக அவர் செவ்வாய்கிழமை சக்கர நாற்காலியில் அவைக்கு வந்திருந்தார். டெல்லி மசோதா மீது நடந்த வாக்கெடுப்பில் அதற்கு எதிராக அவர் வாக்களித்தார்.

# பிரதமரின் பெரிய மனதைப் பாராட்டுங்கள் ராகுல் பாஜக எம்.பி.யின் பேச்சும் காங்கிரஸ் பதிலடியும்



**புதுடெல்லி , ஆக. 10–**

எம்.பி. பதவி கிடைத்தவுடனேயே மீண்டும் துக்ளக் சாலை பங்களாவை ராகுல் காந்திக்கு ஒதுக்கியதிலிருந்து பிரதமர் நரேந்திர மோடியின் பெரிய மனதை ராகுல் காந்தி புரிந்துகொள்ள வேண்டும் என்று கூறிய பாஜக எம்.பி.க்கு காங்கிரஸ் பதிலடி கொடுத்துள்ளது.

அவதூறு வழக்கில் ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட 2 ஆண்டு சிறை தண்டனைக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்தது. இதையடுத்து அவருக்கு மீண்டும் மக்களவை எம்.பி. பதவி வழங்கப்பட்டது.

மக்களவை எம்.பி பதவியில் இருந்து தகுதியிழப்பு செய்யப்பட்டதால், டெல்லி துக்ளக் சாலையில் வழங்கப்பட்டிருந்த 12-ம் எண் அரசு வீட்டை ராகுல் காந்தி கடந்த ஏப்ரல் மாதம் காலி செய்து, தாய் சோனியா வீட்டில் குடியேறினார். தற்போது அவர் மீண்டும் எம்.பி.யாகியுள்ளதையடுத்து, அவருக்கு மீண்டும் அதே வீடு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ராகுல் காந்திக்கு மீண்டும் பங்களா ஒதுக்கப்பட்டது குறித்து கருத்து தெரிவித்த பாஜக எம்.பி ரவி கிஷன், "பிரதமரின் பெரிய மனதைப் புரிந்து கொள்ளுங்கள் ராகுல் அவர்களே. உங்கள் தண்டனை மீது இடைக்கால தடை தான் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரதமர் மோடி உங்களுக்கு மீண்டும் துக்ளக்சாலை பங்களாவை வழங்கியுள்ளார். அவருடைய பெரிய மனதைப் புரிந்துகொண்டு பாராட்டுங்கள். " என்று கூறியிருந்தார்.

இது குறித்து காங்கிரஸ் கட்சியின் சுப்ரியா ஸ்ரீநடே கூறுகையில், "துக்ளக் சாலை பங்களா ஒன்றும் பிரதமர் மோடியின் குடும்பச் சொத்து அல்ல. அது ராகுல் காந்திக்கு மக்கள் வாக்களித்ததால் கிடைத்தது. இதில் மோடி எந்த சகாயமும் செய்யவில்லை" என்று பதிலடி கொடுத்துள்ளார்.

## உ.பி. பொருளாதார வளர்ச்சி

# 20 சதவீதம் உயர்வு முதல்வர் யோகி ஆதித்யநாத் தகவல்



**லக்னோ , ஆக. 10–**

உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் செவ்வாய்கிழமை கூறியதாவது. அடுத்த நான்கு ஆண்டுகளில் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை (ஜிஎஸ்டிபி) 1 டிரில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொண்டு வருகிறது. கடந்த நிதியாண்டில் மாநிலத்தின் ஜிடிபி 20 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது. கடந்த 5-6 ஆண்டுகளில் தனிநபர் வருமானம் மற்றும் ஏற்றுமதி இருமடங்காக அதிகரித்துள்ளன.

பொருளாதார வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கான முக்கிய துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுக்கு தேவையான சலுகைகளை அளிப்பதிலும், புதிய கொள்கை வகுப்பதிலும் அரசு முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது.

அரசின் நடவடிக்கைகள் விவசாயிகளின் மத்தியில் நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளது. அதன் காரணமாகவே, ஒவ்வொரு ஆண்டும் ரூ.19,000 கோடி மதிப்பிலான விவசாயப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டு இதனை இரட்டிப்பாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

96 லட்சம் நிறுவனங்களை உள்ளடக்கிய உ.பி.யின் எம்எஸ்எம்இ துறை மிகவும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. ஒட்டுமொத்த அளவில் ரூ.86,000 கோடியாக இருந்த ஏற்றுமதியை தற்போது ரூ.1.75 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரியில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்: மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப்குமார் தகவல்



**திருச்சி , ஆக. 10–**

திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரியில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் வரும் 12-ம் தேதி நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப்குமார் தகவல் தெரிவித்துள்ளார்.

கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள வேலைநாடுநர்களை தனியார் துறைகளில் பணியமர்த்தும் நோக்கத்தோடு, திருச்சிராப்பள்ளி மாவட்ட நிர்வாகம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 12.08.2023 சனிக்கிழமை அன்று காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இம்முகாமில் தொழில்துறை, சேவைத்துறை, விற்பனைத்துறை போன்ற பல்வேறு தனியார்துறைகளைச் சார்ந்த 150-க்கும் மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்கள் தகுதியுள்ள நபர்களை வேலைக்கு தேர்ந்தெடுக்க உள்ளனர்.

மேலும், இம்மாவட்டத்திலுள்ள திறன் பயிற்சி நிறுவனங்கள் கலந்துகொண்டு இலவசதிறன் பயிற்சிக்கு ஆட்களை தேர்வு செய்யவுள்ளனர்.

இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் 10ம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு, ஐ.டி.ஐ,டி, ப்ளமோ, செவிலியர், இளநிலை, முதுநிலைபட்டப்படிப்புகள் மற்றும் பொறியியல் பட்டப்படிப்புகள் போன்ற கல்வித்தகுதிகளையுடைய 18 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட வேலைநாடுநர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் சுய விவரக்குறிப்பு அனைத்து கல்விச்சான்றுகளின் நகல்கள், ஆதார் அட்டைமற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றுடன் கலந்து கொண்டு பயன்பெறலாம். மேலும், தனியார்துறையில் வேலைவாய்ப்பு பெறவிரும்பும் வேலைநாடுநர்கள், தமிழ்நாடு அரசின் https://www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்தும் பயன்பெறலாம்.

இத்தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில், ஒரே இடத்தில் பல்வேறு தனியார் நிறுவனங்களின் நேர்காணலில் கலந்துகொண்டு, வேலைநாடுநர்கள் தாங்கள் விரும்பும் வேலைவாய்ப்பினை பெற இது ஒரு நல்லவாய்ப்பு என்பதால், திருச்சிராப்பள்ளி மாவட்ட வேலைநாடுநர்கள் இம்முகாமில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

# மும்பையில் அருங்காட்சியகமாக மாறும் 67 ஆண்டு கால அப்சரா அணு உலை



**மும்பை , ஆக. 10–**

மகாராஷ்டிர மாநிலம் மும்பை புறநகர் பகுதியான டிராம்பேவில் பாபா அணு ஆராய்ச்சி மையம் (பார்க்) உள்ளது. நாட்டின் முன்னோடி அணு ஆராய்ச்சி நிறுவனமான இது, 1954-ல் தொடங்கப்பட்டது.

இதில் அப்சரா அணு உலை 1956, ஆகஸ்ட் 4-ம் தேதி, அதாவது 67 ஆண்டுகளுக்கு முன் செயல்பாட்டுக்கு வந்தது. இந்தியா மட்டுமின்றி ஆசியாவின் முதல் அணு உலை இதுவாகும். 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஆராய்ச்சியாளர்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய அப்சரா அணு உலை புனரமைப்பு பணிகளுக்காக கடந்த 2009-ல் மூடப்பட்டது. பிறகு மேம்படுத்தப்பட்ட அணு உலை, அப்சராயு என்ற பெயரில் 2018 செப்டம்பரில் செயல்படத் தொடங்கியது.

அணு இயற்பியல், மருத்துவப் பயன்பாடு, பொருள் அறிவியல், கதிர்வீச்சு பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் அடிப்படை ஆராய்ச்சிக்காக விஞ்ஞானிகள் இதைப் பயன்படுத்தி வந்தனர். அப்சரா-யு அணு உலையின் செயல்பாடு சில ஆண்டுகளுக்குப் பிறகு நிறுத்தப்பட்டது. இந்நிலையில் இதனை அருங்காட்சியகமாக மாற்றுவது குறித்து திட்டமிடப்பட்டு வருகிறது.

இது குறித்து பாபா அணு ஆராய்சி மையத்தின் இயக்குநரும் தலைவருமான ஏ.கே.மொகந்தி கூறியதாவது:

அப்சராவை ஒரு அருங்காட்சியகமாக மாற்றுவதற்கான திட்டத்தை நாங்கள் வகுத்து வருகிறோம். இது இந்தியாவின் அணுசக்தி திட்ட வரலாற்றை பொதுமக்களுக்கு வழங்கும். இந்திய அணுசக்தி திட்டத்தின் தந்தை என அழைக்கப்படும் ஹோமி பாபா, அணு உலையில் அமரும் இடம். பழைய பயிற்சி பள்ளி உள்ளிட்ட இடங்கள் பார்வையாளர்களுக்கு காண்பிக்கப்படும்.

இத்திட்டம் குறித்து நேரு அறிவியல் மைய அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளோம். இந்திய அணு ஆயுத திட்டங்களுக்கு இதயத் துடிப்பாக விளங்கும் பாபா அணு ஆராய்ச்சிமையம் உயர் பாதுகாப்பு மண்டலத்தில் உள்ளது. எனவே இதன் பாதுகாப்பை சமரசம் செய்துகொள்ளாமல் பொதுமக்களை அனுமதிப்பது சவாலான பணியாக இருக்கும்.

பொதுமக்களை தெற்கு வாயில் வழியாக அனுமதிக்கலாம் என்பது தற்போதைய திட்டமாகும். அருங்காட்சியக திட்டம் நடைமுறைக்கு வர இன்னும் ஓராண்டு ஆகலாம். இவ்வாறு கூறினார்.

### காரைக்காலில் தியாகி ராமச்சந்திரனை சந்தித்த ஆட்சியர்

# உள்துறை அமைச்சகம் டெல்லியில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட நினைவு பரிசினை வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்



காரைக்கால்

சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகங்களை நினைவு கூர்வதற்கும் விடுதலையின் அமுதப் பெருவிழாவின் போது அவர்களிடம் இருந்து ஊக்கம் பெறுவதற்க்கும் இந்திய அரசின் மத்திய உள்துறையின் ஸ்வதந்த்ரதா சைனிக் சம்மான் யோஜனா (எஸ்.எஸ்.எஸ்.ஒய்) புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்ட சுதந்திரப் போராட்ட வீரரை அவரது இல்லத்தில் சென்ற கௌரவிக்க பரிந்துரைத்துள்ளது.

அதன்படி மத்திய உள்துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதல்படி காரைக்காலில் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கு கொண்ட காரைக்கால் மாவட்டம் திருவேட்டக்குடியை சேர்ந்த சுதந்திர போராட்ட தியாகி ராமச்சந்திரன் பங்கு கொண்டு சிறை வாசம் சென்று சுதந்திர வேட்கையில் பங்கு கொண்டார்.

இதனை அடுத்து சுதந்திரப் போராட்ட வீரர் .ராமச்சந்தரனை கௌரவிக்கும் விதத்தில் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் திருவேட்டக்குடியில் உள்ள தியாகி ராமச்சந்திரன் குடியிருக்கும் வீட்டிற்கு நேரில் சென்றார். பின்னர் தியாகி ராமச்சந்திரனை சந்தித்த ஆட்சியர் உள்துறை அமைச்சகம் டெல்லியில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட நினைவு பரிசினை வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கனிடம், ராமச்சந்திரன் காரைக்காலில் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் செயல்பாடுகள் மற்றும் சுதந்திர முன்னேற்பாடுகளையும் தேச தலைவராகளை சந்தித்தது முதற்கொண்டு நினைவு கூர்ந்து பேசினார்கள்.

### குருவராஜ கண்டிகை பள்ளியில்

# ஆசிரியரை தாக்கியவர்களை உடனே கைது செய்ய வேண்டும்: சா.அருணன் வலியுறுத்தல்



ஊத்துக்கோட்டை, ஆக10–

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், பூலப்பேடு அருகே உள்ள திடீர் நகரை சேர்ந்த சுரேஷ்பாபு-செவந்தி தம்பதியரின் மகன் ஹரிஹரன் ஆவான்.இவன் குருவராஜகண்டிகை அரசு உயர்நிலைப்பள்ளியில் 6-ம் வகுப்பு படித்து வருகிறான்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மதியம் தற்காலிக ஆசிரியராக பணியாற்றிவரும் மோகன் என்பவர் ஹரிஹரனை அடித்ததாக சொல்லப்படுகிறது.இதனை கேள்விப்பட்ட பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் ஏராளமானோர் நேற்று காலை பள்ளிக்கு வந்து ஆசிரியர் மோகனை ஒருமையில் பேசி தாங்கள் அணிந்திருந்த காலணிகளை கழற்றி அடித்ததும்,கைகளால் தாக்கியதும் நெஞ்சை பதப்பதைக்க வைக்கும் காட்சியாக இருந்தது. ஆசிரியர் மீது தாக்குதல் நடத்திய கொடூர சம்பவத்தை தமிழ்நாடு அரசு ஊழியர்கள்,ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு வன்மையாககண்டிக்கிறது.

ஆசிரியரை தாக்கியவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து கைது செய்ய வேண்டும்,இனிவரும் காலங்களில் இதுபோன்ற சம்பவம் நடக்காமல் இருக்க பணி பாதுகாப்பு சட்டத்தை உடனே கொண்டு வரவேண்டும்.

ஆசிரியர்களை தாக்கும் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க என தமிழ்நாடு முதலமைச்சர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர், பள்ளிக்கல்வித்துறை செயலாளர், பள்ளிக்கல்வித்துறை இயக்குநர், தொடக்கக்கல்வித்துறை இயக்குநர் ஆகியோரை தமிழ்நாடு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நலகூட்டமைப்பு சார்பில் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நலகூட்டமைப்பு நிறுவனத் தலைவர் சா.அருணன் தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### காரைக்கால் மாவட்டத்தில் பொதுப்பணித் துறையின் மூலம்

# பல்வேறு துறைகளில் நடைபெறும் பணிகளை மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் துறை அதிகாரிகளுடன் ஆய்வு



காரைக்கால், ஆக10–

காரைக்கால் மாவட்டத்தில் பொதுப்பணித்துறையின் மூலம் பல்வேறு துறைகளில் நடைபெறும் பணிகளை மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் சிதம்பரநாதன் மற்றும் துறையின் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

முதலில் அரசு பொது மருத்துவமனைக்கு எதிர்ப்புறம் அமைந்துள்ள நீதிபதிகள் தங்கும் விடுதி மற்றும் பழைய நீதிமன்ற வளாகம் அருகில் அமைந்துள்ள நீதிபதிகள் தங்கும் விடுதி ஆகியவற்றில் நடைபெறும் புணரமைப்பு பணிகளை பார்வையிட்ட ஆட்சியர் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ள நிலையில் இன்னும் ஒரு வாரத்திற்குள் பணிகளை முடித்து நீதிமன்ற அலுவலுகத்திடம் ஒப்படைக்கும்படி பொதுப்பணித்துறை நிர்வாகபொறியாளரிடம் கேட்டு கொண்டார்.

மேலும்பெருந்தலைவர் காமராஜர் நிர்வாக வளாகத்தில்அமைந்துள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தின் உட்புறம் 12 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள பயிற்சி முகமை மையத்தை (M.C.C.) விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டு வர ஆட்சியர் அறிவுறுத்தினார். மேலும் பெருந்தலைவர் காமராஜர் வளாகத்தில் உள்ள மாநாட்டுக் கூடத்தில் ரூபாய் 3.5 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக8டன்மதிப்புள்ள குளிர்சாதன வசதி செய்யப்பட்டு பணிகள் நிறைவுற்ற நிலையில் குளிர்சாதன வசதியை ஆய்வு மேற்கொண்டு பொதுப்பணித்துறை அதிகாரிகளை பாராட்டினார்.

மேலும்வ.உ.சி.புறவழிச் சாலையில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் 2023-ஆம் ஆண்டு நடைபெற உள்ள சுதந்திரதின பொன்விழாவை முன்னிட்டு சுமார் 2.5 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப்பணி துறையால் பந்தல் அமைக்கும் பணிகள் மேலும் மைதானத்தை செப்பணிடும் பணிகள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் கழிவறைகளை மேம்படுத்தும் பணிகளையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு இப்பணிகளை விரைந்து முடிக்கும்படி கேட்டுக்கொண்டார்.



ஆடி கிருத்திகையை முன்னிட்டு உத்திரமேரூர் நடுத்தெரு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் அமைந்துள்ள தண்டாயதபாணி முருகனுக்கு சிறப்பு சந்தனகாப்பு செய்யப்பட்டுள்ளது. ஏராளமான பக்தர்கள் வந்து தரிசனம் செய்து சென்றனர்

# அதிமுகவின் மதுரை மாநாட்டிற்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்

### ஐகோர்ட்டு மதுரை கிளை உத்தரவு



மதுரை, ஆக10–

மதுரையில் வருகிற 20-ந்தேதி நடைபெறும் அ.தி.மு.க. மாநாட்டிற்கு உரிய பாதுகாப்பு வழங்குவதை மதுரை மாவட்ட எஸ்.பி. உறுதிப்படுத்த வேண்டும் என ஐகோர்ட்டு மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வானதையடுத்து முதன்முறையாக அ.தி.மு.க.வின் வீர வரலாற்றின் எழுச்சி மாநாடு மதுரையில் வருகிற 20-ந்தேதி நடக்கிறது. இதற்காக மதுரை வளையங்குளம் பகுதியில் சுமார் 50 ஏக்கர் பரப்பில் மாநாட்டு மேடை மற்றும் பந்தல் பிரமாண்ட முறையில் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த பணிகளை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மற்றும் தலைமைக் கழக நிர்வாகிகள் மதுரையில் முகாமிட்டு தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள்

மாநாட்டில் தமிழகம் முழுவதும் இருந்து தொண்டர்கள் பங்கேற்க வசதியாக மாநாட்டு திடல் அருகே 5 இடங்களில் வாகனங்களை நிறுத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் மதுரையில் நடைபெறும் அ.தி.மு.க. மாநாட்டிற்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் உதயகுமார் ஐகோர்ட்டு மதுரை கிளையில் மனுதாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட்டு மதுரை கிளை, மதுரையில் வரும் 20ம் தேதி நடைபெறும் அ.தி.மு.க. மாநாட்டிற்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும். பாதுகாப்பு வழங்குவதை மதுரை மாவட்ட எஸ்.பி. உறுதிப்படுத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

# 'தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்' ஆவணப் படத்தின் தயாரிப்பாளர், இயக்குநருக்கு பாகன் தம்பதி நோட்டீஸ்



முதுமலை, ஆக10–

'தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்' ஆவணப் படத்தின் தயாரிப்பாளர், இயக்குநருக்கு, அந்த படத்தில் நடித்து புகழ்பெற்ற பாகன் தம்பதி நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

முதுமலை புலிகள் காப்பகத்தில் 20-க்கும் மேற்பட்ட வளர்ப்பு யானைகளை வனத்துறையினர் பராமரித்து வருகின்றனர். இங்கு தாயை பிரிந்து வந்த ரகு, பொம்மி ஆகிய குட்டி யானைகளை, பொம்மன் - பெள்ளி தம்பதி வளர்த்து வந்தனர்.

இதையறிந்த கார்த்திகி கொன்சால்வேஸ் என்ற இயக்குநர், 2 குட்டி யானைகளை வளர்த்த விதம் உள்ளிட்ட அனைத்தையும், 2 ஆண்டுகளாக வனப் பகுதியில் தங்கி, 'தி எலிபெண்ட் விஸ்பரர்ஸ்' என்ற பெயரில் ஆவணப்படமாக எடுத்தார். இதன் காட்சிகள் சிறப்பாக இருந்ததால், ஆஸ்கர் விருதுக்கு அனுப்பிவைத்தார். இதில் சிறந்த ஆவணப் படமாக தேர்வு பெற்றது. இதனால், முதுமலை புலிகள் காப்பகம் உலகப்புகழ் பெற்றது.

இதையடுத்து பொம்மன் - பெள்ளி தம்பதியை தமிழக முதல்வர் ஸ்டாலின் அழைத்து ஒரு லட்சம் பணம் கொடுத்து பாராட்டினார். அதேபோல், பிரதமர் மோடி, குடியரசு தலைவர் முர்மு ஆகியோரும் முதுமலை வந்து தம்பதியை பாராட்டிச் சென்றனர். இந்நிலையில், ஆவணப்படம் எடுத்த தயாரிப்பாளர், இயக்குநர் ஆகியோர் தங்களுக்கு வீடு, நிலம்,

பணம் தருவதாக கூறி ஏமாற்றிவிட்டனர் என்று இயக்குநர் கார்த்திகி மீது பொம்மன் - பெள்ளி தம்பதி புகார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் கூறும்போது, "இரவு, பகல் பாராமல் வனப்பகுதிக்குள் சென்று அவர்கள் கூறியபடி நடித்துக் கொடுத்தோம். வயதான காலத்தில் எங்களுக்கு நடக்கக்கூட முடியாதநிலையிலும், கஷ்டத்தை பொறுத்துக் கொண்டு காடு, மேடு என அலைந்து அவர்கள் கூறியபடி செய்தோம். ஆவணப்படம் முடிந்ததும், எங்களுக்கு வீடு, நிலம், பணம், பேரக் குழந்தைகளுக்கு நல்ல படிப்பு கொடுப்பதாக கூறினார்கள். ஆனால், எதுவும் தரவில்லை. அவரை தொடர்புகொண்டால் 'நான் கொஞ்சம் பிஸியாக இருக்கிறேன்' என்று கூறுகிறார். 'உங்கள் அக்கவுண்ட்டில் பணம் போட்டிருக்கிறேன்' என்கிறார். ஆனால், ஒன்றுமில்லை. ஏமாற்றுகிறார்கள், எல்லாம் கடவுள் பார்த்துக்கொள்வார்" என்றனர்.

இதற்கிடையே சென்னையை சேர்ந்த சமூக ஆர்வலர் பிரவீன் ராஜ் என்பவர் பொம்மன்-பெள்ளி தம்பதியை அழைத்துச் சென்று, அவர்களின் பிரச்சினை குறித்து முகமது மன்சூர் என்ற வழக்கறிஞருடன் பேசியுள்ளார். இதைத்தொடர்ந்து, பட தயாரிப்பாளர், இயக்குநர் ஆகியோருக்கு வழக்கறிஞர் முகமது மன்சூர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். இதுதொடர்பாக பிரவீன் ராஜ் கூறும்போது, "இந்த ஆவணப் படம் எடுக்க பொம்மன்-பெள்ளி தம்பதி பல்வேறு கஷ்டங்களை சந்தித்துள்ளனர். படப்பிடிப்பு முடிவில் வீடு, பணம், பேரன்களுக்கு படிப்பு கொடுப்பதாக வாய்மொழி உத்தரவாதம் அளித்துள்ளனர்.

ஆஸ்கர் விருது என்பது அதில் நடித்த யானை, பூனை என எல்லோருக்கும் சொந்தமானதுதான். அந்த ஆஸ்கர் விருதை 2 நாட்கள் பொம்மன் வீட்டில் வைத்திருக்கலாமே, அப்படி என்ன தீண்டத்தகாதவர்களா அவர்கள்? ஆஸ்கர் விருது கிடைத்ததன் மூலமாக தயாரிப்பாளர், இயக்குநருக்கு ரூ.7 கோடி வரை பணம் கிடைத்துள்ளதாக தெரிகிறது.

ஆவணப்படத்தின் மூலமாக கிடைக்கும் பணத்தில் ஒரு பகுதியை பொம்மன் - பெள்ளிக்கு கொடுப்பதாக உறுதி அளித்தனர். ஆனால், அதை செய்யவில்லை. வீடு கட்டி தருவதாகவும் கூறியுள்ளனர். இப்போது தொடர்பு கொண்டால் செல்போனை எடுப்பதில்லை. இதையடுத்து, நோட்டீஸ் அனுப்பிஉள்ளோம்" என்றார்.

### சிறுவாபுரி அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில்

# ஆடி கிருத்திகையை முன்னிட்டு பால்குட ஊர்வலம்





ஊத்துக்கோட்டை, ஆக10–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் புகழ் பெற்ற அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில் ஆடி கிருத்திகையை முன்னிட்டு நேற்று விடியற்காலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது.

மூலவருக்கு சிறப்பு பூஜைகள், சிறப்பு அபிஷேகம் உள்ளிட்டவை நடைபெற்றது. பின்னர், மூலவர் ராஜ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். நேற்று காலை 10 மணிக்கு சிறுவாபுரியில் உள்ள ஸ்ரீ வைஷ்ணவி துர்கை சன்னதியில் இருந்து நூற்றுக்கணக்கான பக்தர்கள் பால்குடம்,பால் காவடி,பன்னீர் காவடி உள்ளிட்டவர்களை சுமந்த வண்ணம் ''கந்தனுக்கு அரோகரா" "முருகனுக்கு அரோகரா" என்று பக்தி பரவசத்துடன் கோஷம் எழுப்பிய வண்ணம் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாக சென்று அருள்மிகு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலை வந்தடைந்தனர். இதன் பின்னர்,பக்தர்கள் கொண்டு வந்த பால்,பன்னீர், தயிர் உள்ளிட்டவைகளை உற்சவருக்கு அபிஷேகம் செய்தனர்.

இதன்பின்னர்,தலைமை குருக்கள் ஆனந்தன் தலைமையில் உற்சவருக்கு சிறப்பு அலங்காரம், மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே. கோவிந்தராஜன்,இந்து சமய அறநிலையத்துறை திருவள்ளூர் மாவட்ட குழு உறுப்பினர் டி.லட்சுமி நாராயணன் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திருக்கோவிலின் செயல் அலுவலர் செந்தில்குமார் தலைமையில் திருக்கோவில் பணியாளர்களும், ஊழியர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.





▶ திமுக மருத்துவ அணி மாவட்ட அமைப்பாளர்கள், சட்டமன்ற தொகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை திமுக தலைமை நியமனம் செய்து அறிவிப்பு வெளியிட்டது. இந்நிலையில், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மருத்துவ அணி மாவட்ட தலைவராக நியமிக்கப்பட்ட ஆரணி,சன்னதி தெருவை சேர்ந்த டாக்டர் அ.பாலமுருகன் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜனை மருத்துவ அணியின் சார்பாக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகமான பெருவாயலில் மரியாதை நிமித்தமாக சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார்.



▶ 75-ஆவது சுதந்திர தின பொன்விழா ஆண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டும் 76-ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டும் காரைக்கால் மாவட்ட நிர்வாகம் மற்றும் நகராட்சி நிர்வாகம் சார்பில் ஐந்து நாட்கள் "நம்மண் நம்நாடு" என்ற திட்டத்தின் மூலம் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற உள்ளன. இதன் முதல் நிகழ்வாக துவக்க விழா நேற்று காரைக்கால் நகராட்சி வளாகத்தில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் நடைபெற்றது. மேலும் இந்நிகழ்வில் நகராட்சி ஆணையர் சத்யா துணை இயக்குனர் (உள்ளாட்சித் துறை)சுபாஷ் நகராட்சி செயற் பொறியாளர் லோகநாதன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழுவினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# மயக்க மருந்து கொடுத்து பெண்களை பலாத்காரம் செய்த அமெரிக்க டாக்டர்



நியூயார்க், ஆக10–

அமெரிக்காவில் உள்ள டாக்டர் ஒருவரின் மீது கடுமையான பாலியல் குற்றச்சாட்டுகளை காவல்துறை பதிவு செய்துள்ளது. அமெரிக்காவின் நியூயார்க் நகரிலுள்ள நியூயார்க் ப்ரெஸ்பிடேரியன்குயின்ஸ் மருத்துவமனையில் குடல் மற்றும் இரைப்பை சிகிச்சை நிபுணராக பணி புரிந்தவர் 33 வயதான ஜி ஆலன் செங் (Zhi Alan Cheng). இவரது இல்லம் அஸ்டோரியா பகுதியில் உள்ளது.

கடந்த டிசம்பர் மாதம், தனது காதலியை தனது வீட்டிற்கு அழைத்து சென்றிருக்கிறார் டாக்டர் செங். அங்கு அவரை மயக்கமடைய செய்திருக்கிறார். மயக்கம் தெளிந்து அப்பெண்ணுக்கு நினைவு திரும்பியது. ஆனால் தனக்குஎன்ன நடந்தது என அவருக்கு நினைவில்லை. அங்கு அவருக்கு ஒரு வீடியோ கிடைத்தது. அதில் டாக்டர் செங் அவரை பாலியல் பலாத்காரம் செய்யும் காட்சிகள் இருந்தன. இவை மட்டுமின்றி டாக்டர் செங் மேலும் சில பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்துவதும் அதில் பதிவாகியிருந்தது. இது குறித்து அப்பெண் காவல்துறையிடம் புகார் அளித்தார்.

இதனையடுத்து டாக்டர் செங்கை அந்த மருத்துவமனை பணிநீக்கம் செய்தது. இந்த விசாரணையின் போது டாக்டர் செங்கின் அலைபேசி, லேப்டாப் உள்ளிட்ட உடைமைகள் பரிசோதனை செய்யப்பட்டது. அதில் டாக்டர் செங், தான் வேலை செய்து வந்த மருத்துவமனையிலும், வீட்டிலும் பல பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்துவது பதிவாகியிருந்தது. இதனையடுத்து அவரது வீட்டை சோதனை செய்த புலனாய்வு அதிகாரிகளுக்கு ஃபென்டனில், கீடமைன், எல்எஸ்டி மற்றும் அறுவை சிகிச்சைக்கான மயக்க மருந்துகள் உட்பட பல போதை மருந்துகளும் சிக்கின.

தற்போது அவர் மீது சுமார் 50 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றில், கற்பழிப்பு, பாலியல் துன்புறுத்தல், தாக்குதல், போதை பொருள் வைத்திருத்தல் மற்றும் சட்டவிரோதமாக பிறரை கண்காணிப்பது உட்பட பல பிரிவுகள் அடங்கும். விசாரணையில் டாக்டர் செங் பெண்களை திரவ மயக்க மருந்துகளின் மூலம் மயக்கமடைய செய்து அவர்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளார் என தெரிய வந்துள்ளது. வீடியோவில் உள்ள பதிவுகளின்படி சில பாதிக்கப்பட்டவர்களை காவல்துறை தேடி வருகிறது. மருத்துவமனையில் டாக்டர் செங் துன்புறுத்திய ஒரு பெண் உட்பட அவரால் பாதிக்கப்பட்ட பல பெண்களை காவல்துறை கண்டறிய முயற்சிப்பதாகவும், தாய்லாந்து, நியூயார்க், லாஸ் வேகாஸ், ஸான் பிரான்ஸிஸ்கோ ஆகிய இடங்களில் உள்ள ஓட்டல் அறைகளிலும், வீடுகளிலும் இவரால் பாதிக்கப்பட்ட 5 பேரை காவல்துறை தேடி வருவதாகவும் தெரிகிறது. ஆனால் இந்த குற்றச்சாட்டுகள் அனைத்தையும் டாக்டர் செங் மறுத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆலங்குடி அருகே மது எடுப்பு திருவிழா



ஆலங்குடி, ஆக.10-

ஆலங்குடி அருகேயுள்ள கீழாத்தூர் நாடியம்மன், கொத்தமங்கலம் பிடாரியம்மன் கோயில் பாளையெடுப்புத் திருவிழா நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகேயுள்ள பிரசித்தி பெற்ற கீழாத்தூர் நாடியம்மன் கோயில் திருவிழா இரு வாரங்களுக்கு முன்பு பூச்சொரிதல் விழாவுடன் தொடங்கியது. தொடர்ந்து கோயிலில் அம்மனுக்கு தினசரி சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வந்தன. திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான பாளையெடுப்புத் திருவிழா நேற்று மாலை நடைபெற்றது. இதில், அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான பெண்கள் அலங்கரிக்கப்பட்ட குடங்களில் தென்னம்பாளைகளை சுமந்தவாறு வாணவேடிக்கைகள், மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாகச்சென்று கோயிலை அடைந்தனர். தொடர்ந்து, அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. இதில், ஆலங்குடி பகுதியில் உள்ள பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதேபோல, கொத்தமங்கலம் பிடாரியம்மன் கோயிலில் நடைபெற்ற திருவிழாவில் கொத்தமங்கலம் ஊராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான பெண்கள் அலங்கரிக்கப்பட்ட குடங்களில் தென்னம்பாளைகளை சுமந்தவாறு, வாணவேடிக்கைகள், மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாகச்சென்று கோயிலை அடைந்தனர். தொடர்ந்து, அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. இதில், பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர்.



▶ தென்காசி மாவட்டம் கழக துணை பொதுச்செயலாளரும், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினருமான கவிஞர் கனிமொழியை தென்காசி தெற்குமாவட்ட திமுக புதிய பொறுப்பு ஏற்ற பொறுப்பாளர் வி. ஜெயபாலன், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினரும் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளருமான ராஜா நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.



▶ தென்காசி மாவட்டம் சொக்கம்பட்டி கருப்பாநதி அணை அருகே மேற்கு தொடர்ச்சி மலையில் இரண்டு நாட்களாக அடர்ந்த மரங்கள் சூழ்ந்த மூலிகை செடிகள் நிறைந்த வனப்பகுதியில் தொடர்ந்து தீ எரிந்த வண்ணமாக உள்ளது. ஆயிரக்கணக்கான பரப்பளவு கொண்ட வனப் பகுதியில் வன உயிரினங்கள் வாழும் பகுதியில் பற்றி எரியும் தீயை அணைக்க எந்த நடவடிக்கையும் எடுக்காத கடையநல்லூர் வனச்சரகம், விலைமதிப்பற்ற காட்டு மரங்கள் தீயில் கருகி சாம்பலாக பொதுமக்கள் வசிக்கும் பகுதியில் காற்றில் பறந்து செல்கிறது, குடிதண்ணீரில் காட்டு சாம்பல் படிவதால் குடிதண்ணீரை பயன்படுத்த முடியாத சூழ்நிலை உருவாகிறது மேலும் மாவட்ட நிர்வாகம் தலையிட்டு தீயை அணைக்க வேண்டி சமூக ஆர்வலர்கள் வருத்தம் தெரிவித்த வண்ணம் வருகின்றனர். சாலையோரம் மரங்கள், வீடு தோறும் மரக்கன்றுகள் நட்டு வளர்க்க அரசு ஊக்குவிக்கப்படுகிறது இரண்டு நாட்களாக மேற்கு தொடர்ச்சி மலையில் பற்றி எரியும் விலை உயர்ந்த தேக்கு, சந்தனம், கோங்கு, மரங்களும், யானை, புலி, கரடி, காட்டெருமை, மான், முயல், மிளா, போன்ற உயிரினங்கள் வாழும் பகுதியில் நெருப்பை பற்ற வைத்தது யார், காட்டில் பசுமாடு மேய்ச்சலுக்காக பற்ற வைத்தார்களா என்ற கோணத்திலும் விசாரிக்கப்படுகிறது.

கடையநல்லூர் ஒன்றியம் நயினாரகரத்தில் ஒன்றிய திமுக சார்பில்

# கலைஞரின் 5-ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி அவரது உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்



தென்காசி , ஆக.10-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஒன்றியம் நயினாரகரத்தில் ஒன்றிய திமுக சார்பில் முன்னாள் முதல்வர் கலைஞரின் 5-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் சுரேஷ் தலைமை வகித்தார், கடையநல்லூர் நகர் மன்றத்தலைவர் மூப்பன் ஹபீர் ரஹ்மான் முன்னிலை வகித்தார், கிளைச் செயலாளர்கள் கொத்தாலகுமார், முத்துராமலிங்கம் வரவேற்றனர்.

முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா. செல்லத்துரை கலைஞரின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நகரச் செயலாளர் எஸ். அப்பாஸ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் முருகன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் திராவிட சுப்பு, தகவல் தொழில் நுட்ப அணி ஜாகீர்உசேன், சுகுமார், காளிமுத்து, பொன்னுமணி, ஸ்டாலின், கணேசன், முத்துக்குமார், மாரியப்பன், குமார், அவை தலைவர் குட்டி பழனி, ஜெயசிலன், அன்பழகன், கணேசன், சிவசிவா, செல்லப்பா, என்றகுத்தாலிங்கம், வீரமணி, ராமலிங்கம் ஒன்றிய பிரதிநிதி ஜி. முருகையா என்ற சுரேஷ், எஸ். பி. கே. டி. குமார், மாடசாமி, வி. ராமையா, கே. வேலு ஆர். செல்லத்துரை, கோவிந்தன், ஜெயராம் மணி அய்யாக்கண்ணு குமார், குலத்தான், சொக்கலிங்கம், மணிகண்டன், குழந்தைவேலு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மத்தியில் ஆளும் பாஜக தலைமையிலான அரசை அதிகாரத்தில் இருந்து வெளியேற்றுவோம்

## முதல்வர் மம்தா பானர்ஜி சபதம்



கொல்கத்தா, ஆக-10

வெள்ளையனே வெளியேறு நாளில்,பாஜக தலைமையிலான அரசை அதிகாரத்தில் இருந்து வெளியேற்றுவோம் என மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் நினைவு நாளில், மகாத்மா காந்தி சிலைக்கு மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி மரியாதை செலுத்தினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,மத்தியில் ஆளும் பாஜக தலைமையிலான அரசை அதிகாரத்தில் இருந்து வெளியேற்றுவோம். மணிப்பூரில் உள்ள பழங்குடியினரை மத்திய அரசு புறக்கணிக்கின்றது. வெள்ளையனே வெளியேறு நாளில், பாஜகவை நாட்டில் இருந்து வெளியேற்றுவோம் என நாங்கள் உறுதி கூறுகிறோம். இனக்கலவரத்தால் மணிப்பூரில் பழங்குடியினர் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். அவர்களின் அவலநிலையைக் கேட்க யாரும் இல்லை. இந்தியாவில் பட்டியில் இனமக்கள் சித்திரவதை செய்யப்பட்டாலும், மத்திய அரசு செவிசாய்க்காமல் உள்ளது. மேற்கு வங்கத்தை மத்திய அரசு புறக்கணிப்பதை எதிர்த்து நாங்கள் போராடுவோம். அதே நேரத்தில் மாநிலத்திற்கு வழங்க வேண்டிய நிதியை மத்திய அரசு விடுவிக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

# ஆகஸ்ட் 14-ம் தேதி அரசு பள்ளிகளில் இனிப்பு பொங்கல் வழங்க தமிழக அரசு உத்தரவு



சென்னை , ஆக.10-

சத்துணவு திட்டத்தின் மூலம் பயன்பெறும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி ஆகஸ்ட் 14-ம் தேதி பள்ளிகளில் இனிப்பு பொங்கல் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர்களான காமராஜர், அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா பிறந்த நாள்களை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு சத்துணவு திட்டத்தின் மூலம் இனிப்பு பொங்கல் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் முன்னாள் முதல்வர் கருணாநிதி பிறந்த நாளையொட்டி ஜூன் 3ஆம் தேதி இனிப்பு பொங்கல் வழங்கப்படும் என்று அமைச்சர் கீதா ஜீவன் கடந்த ஏப்ரல் 14ஆம் தேதி சட்டப் பேரவையில் அறிவித்தார்.

அங்கன்வாடி மையங்களில் 2 முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் சத்துணவு திட்டத்தின் மூலம் பயன்பெறும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ஜூன் 3ஆம் தேதி இனிப்பு பொங்கல் வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அரசாணையும் வெளியிட்டது. ஆனால் இந்த கல்வி ஆண்டில் திட்டமிட்டபடி ஜூன் 1ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படவில்லை. கோடை வெயில் தாக்கம் இருந்ததால் இரு வாரங்கள் கழித்து தான் பள்ளிகள் திறக்கப்பட்டன.

இந்தநிலையில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆகஸ்ட் 14ஆம் தேதி சத்துணவு திட்டத்தில் பயன்பெறும் மாணவ, மாணவிகளுக்கு இனிப்பு பொங்கல் வழங்க தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள 43,094 சத்துணவு மையங்களின் மூலம் 44.72லட்சம் மாணவ மாணவியர்களும், 54,439 குழந்தைகள் மையங்களின் மூலம் 14.40 இலட்சம் குழந்தைகளும் பயன்பெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஓணம் பண்டிகையொட்டி ஆக.29-ல் சென்னை மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை



சென்னை , ஆக.10-

ஓணம் பண்டிகையை முன்னிட்டு வரும் ஆகஸ்ட் 29-ம் தேதி சென்னை மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை அளித்து மாவட்ட ஆட்சியர் அருணா உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: ஓணம் பண்டிகையை முன்னிட்டு 29.08.2023, செவ்வாய்க்கிழமை சென்னை மாவட்டத்துக்கு அரசு ஆணைப்படி உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுகிறது. மேற்படி உள்ளூர் விடுமுறைக்குப் பதில் 02.09.2023 சனிக்கிழமை அன்று சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு பணி நாளாக அறிவிக்கப்படுகிறது.

ஆயினும், உள்ளூர் விடுமுறை நாளான 29.08.2023, அன்று அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள கரூவூலம் மற்றும் சார்நிலை கருவூலங்கள் குறிப்பிட்ட பணியாளர்களைக் கொண்டு பொது மக்களுக்கு சிரமம் ஏற்படாதவாறு செயல்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகப் பொதுக்குழுக் கூட்டம்



*புதுக்கோட்டை, ஆக-10,*

*தமிழ்நாடு பட்டதாரி முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாவட்டப்பொதுக்குழுக் கூட்டம் இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில், நடைபெற்றது.*

*கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் வி.எம்.கண்ணன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் தென்னரசு மற்றும் பொருளாளர் சுரேஷ் உள்ளிட்ட மாவட்ட பொறுப்பாளர்கள் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள்.... புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து, தேர்தல் வாக்குறுதியில் கூறியிருந்தபடி பழைய ஓய்வூதியதிட்ட முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து பணம் பெறும் நடைமுறையை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.*

*தொடர்ந்துபட்டதாரி ஆசிரியர்களின் உரிமைகளை பறிக்கும் விதத்திலும் தமிழக பள்ளிக்கல்வித் துறையின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையிலும், ஆசிரியர் நலனுக்கு எதிராகவும் தொடர்ந்து செயல்பட்டு வரும் கழனிவாசல் அரசு மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜெயந்தியின் செயல்களை முதன்மை கல்வி அலுவலரிடம் ஆதாரங்களுடன் முறையிடுவது என்றும் , அடுத்த கட்டமாக மாவட்டம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்துவதுஎன்றும்முடிவு செய்யப்பட்டது மேலும் ஒரு சில பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு இருக்கைகள் வகுப்பறையில் அனுமதிக்கப்படாதது போன்ற செயல்கள் நடைபெறுவது மிகுந்த மன வருத்தத்தை அளிக்கிறது. இதுபோன்ற நிகழ்வுகள் தொடரும் பட்சத்தில் அது சார்ந்து ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. 13.07.2023, ஞாயிறு ஒட்டன்சத்திரத்தில் நடைபெற உள்ள மாநில பொது குழுவில் புதுக்கோட்டை மாவட்டத்தின் சார்பாக திரளாக கலந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது .*

ஆவுடையார்கோவிலில் இறந்த பத்திரிகையாளர் லெனின் குடும்பத்திற்கு

# டியுஜே மாநிலத் தலைவர் மற்றும் வி.தொ.ச மாநில செயலாளர் நேரில் சென்று ஆறுதல்

ஆவுடையார்கோவில், ஆக.10-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா அமரடக்கி அருகில் உள்ள ஆவணம் பெருங்குடி கிராமத்தில் இரட்சகநாதன் என்பவருக்கு மூத்த மகனாக பிறந்து முதல் பட்டதாரியாக படித்து பட்டம் பெற்று முதலில் இந்தியன் எக்ஸ்பிரஸ்' டெக்கான் கிரானிக்கல், மற்றும் டிடி நெக்ஸ்ட் ஆகிய ஆங்கில நாளிதழ்களில் செய்தியாளராக நீண்ட காலம் பணியாற்றி பிறகு ஈ-நாடு இணைய இதழில் முதுநிலை நிருபராக செயலாற்றிக் கொண்டிருந்த லெனின் செய்தி சேகரிக்க சென்ற போது கோயம்பேடு பேருந்து நிறுத்தத்தில் இருக்கும் பொழுது மாரடைப்பு ஏற்பட்டுள்ளது, அவரை அருகில் இருக்கின்ற கீழ்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர் அங்கு சிகிச்சை பலனின்றி இறந்த லெனின் உடலை உடற்கூறு ஆய்வுக்கு பிறகு அவருடைய சடலம் சொந்த ஊரான ஆவணம் பெருங்குடி கிராமத்திற்கு கொண்டு வந்து உடலை தகனம் செய்தனர்.

இந்நிலையில் டி யு ஜே பத்திரிகையாளர் சங்க மாநிலத் தலைவர் புருஷோத்தமன் மற்றும் விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில செயலாளர் சங்கர் ஆகியோர் அவருடைய குடும்பத்திற்கு நேரடியாக வந்து அவருடைய பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்தனர். பின்பு ரூபாய் 5,000 அவருடைய குடும்பத்திற்கு வழங்கி இருவரும் கூட்டாக செய்தியாளர்களும் தெரிவித்தனர். மறைந்த மூத்த செய்தியாளர் லெனின் குடும்பம் மிகவும் வருமையில் உள்ளதால் அவருடைய குடும்பத்திற்கு ரூபாய் 20 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கிடைக்க தமிழக முதல்வர் ஸ்டாலினிடம் கோரிநிதியை பெற்றுத்தர முயற்சி எடுப்போம் என்று தெரிவித்தார். ஸ்டாலின் குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பமாக இருப்பதால் இந்த நிதி அவர்களுடைய குடும்பத்தை ஓரளவுக்கு நிறைவு செய்யும் என்று கூறியுள்ளனர்.

# திருமயம் எய்ம் அறக்கட்டளை மூலமாக பள்ளி மாணவ,மாணவிகளுக்கு பல நலத்திட்ட உதவிகள்



*திருமயம்,ஆக.10-*

*புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் எய்ம் அறக்கட்டளை மூலமாக பள்ளி மாணவ,மாணவிகளுக்கு பல நலத்திட்ட உதவிகளை 15 ஆண்டுகளாக ஒவ்வொரு ஊராட்சிகளில் இருக்கும் பள்ளிகளில் உள்ள மாணவ மாணவிகளுக்கு பலவகையான பொதுச் சேவைகள் நடந்து கொண்டு உள்ளது இந்தக் கல்வி ஆண்டில் பள்ளிக்குச் செல்லும் மாணவ மாணவிகளுக்கு திருமயம் பகுதியில் குக் கிராமங்களை தேர்ந்தெடுத்து மாணவ மாணவிகளுக்கு புத்தகப்பை எழுது பொருட்கள்பள்ளிமுடிந்து வீட்டுக்கு திரும்பிய பிறகு உள்ளூர் விளையாட்டு மைதானங்களில் விளையாடும்நேரங்களில் அணியும் வண்ணமாக சீருடைகள் புலிவலம் ஊராட்சி சொக்கநாதன் பட்டி ஊனையூர் ஊராட்சி இந்திரா நகர் காரணத்தான்பட்டி பனியப்பட்டி ஊராட்சி பூஞ்சோலை நகரில் இல்லம் தேடி கல்வி நடத்தும் குழுக்களை தேடிச் சென்று ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாராட்டி விளையாட்டு சீருடைகளும் இனிப்புகளும் வழங்கப்பட்டது.*

*மேலும் குழுக்களை நன்றாக நடத்தும் ஆசிரியர்களுக்கும் நன்றாகபடிக்கும்மாணவ, மாணவிகளுக்கும் ஊக்கப் பரிசுகளும்பொதுத்தேர்வு எழுதின குழந்தைகளுக்கு காசோலை பரிசு அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களை தேர்ந்தெடுத்து காசோலை பரிசு வழங்கப்பட்டது மேலும் கீழச்சீவல்பட்டி ஆர்.எம் மெய்யப்ப செட்டியார் தனியார் பள்ளியில் சிறந்த மாணவிகளுக்கு சான்றிதழ் காசோலை வழங்கப்பட்டது தொண்டு நிறுவனத்தின் மூலமாக அடிக்கடி செய்யப்படும் நலத்திட்டங்கள் மூலம் பள்ளியில் படிக்கும் மாணவ,மாணவியருக்கு அதிக உற்சாகத்தை கொடுத்துள்ளது பெற்றோர்கள் ஆசிரியர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.*

# மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானிக்கு 'ராகுல் ஃபோபியா' – மாணிக்கம் தாகூர் விமர்சனம்



புதுடெல்லி , ஆக.10-

மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானிக்கு 'ஃராகுல் ஃபோபியா' இருக்கிறது என்றும், அதனால்தான் பறக்கும் முத்தம் சர்ச்சை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர் விமர்சித்துள்ளார்.

நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீதான விவாதத்தில் ராகுல் காந்தி பேசியதை அடுத்து, அவருக்கு பதில் அளிக்கும் விதமாக மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி பேசினார். அவர் பேசிக்கொண்டிருக்கும் போதே, ராகுல் காந்தி அவையை விட்டு வெளியேறினார். அப்போது அவர் 'பறக்கும் முத்தம்' கொடுத்தபடி புறப்பட்டார்.

இது குறித்து சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எழுத்துபூர்வ புகார் அளித்துள்ள 20-க்கும் மேற்பட்ட பாஜக பெண் எம்.பி.க்கள், 'அவையில் ஸ்மிருதி இரானி பேசிக்கொண்டிருந்தபோது ராகுல் காந்தி அநாகரிகமாக நடந்து கொண்டார். அவரது இந்த நடவடிக்கை பெண் எம்.பி.க்களை அவமதித்த செயல் மட்டுமல்ல, நாடாளுமன்றத்தின் கண்ணியத்துக்கும் எதிரானது. அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பாஜகவின் புகாருக்கு காங்கிரஸ் கட்சி பதிலடி கொடுத்திருக்கிறது. இந்தப் புகார் குறித்து பேட்டி அளித்துள்ள காங்கிரஸ் எம்.பி கார்த்தி சிதம்பரம், "மணிப்பூரில் அரசு செயல்படாத நிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி, அரசை நோக்கி முக்கிய கேள்விகளை ராகுல் காந்தி எழுப்பினார். அந்தக் கேள்விகளுக்கு அரசு பதில் அளிக்கவில்லை. இது பாஜகவின் அற்புதமான தந்திரம். முக்கிய கேள்விகளை நாங்கள் எழுப்பும் ஒவ்வொரு முறையும், வரலாற்றில் நடந்த நிகழ்வுகளுக்குச் செல்வதன் மூலமோ அல்லது தொடர்பில்லாத விஷயங்களை பற்றி பேசுவதன் மூலமோ பாஜக அதை திசை திருப்புகிறது" என தெரிவித்துள்ளார்.

"ராகுல் காந்தி எப்போதுமே பெண்களை மதிப்பவர். ஆனால், அவர் நாடாளுமன்றத்திற்கு வருவதை பாஜக விரும்பவில்லை" என காங்கிரஸ் பெண் எம்.பி கீதா கோடா தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவித்துள்ள காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர், "ராகுல் ஃபோபியாவை ஸ்மிருதி இரானி கொண்டிருக்கிறார். அதில் இருந்து வெளிவர அவர் முயல வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். ராகுல் மீதான அச்சம் என்பதையே அவர் 'ராகுல் ஃபோபியா' என்று குறிப்பிட்டுள்ளார்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# பறக்கும் முத்தம்: ராகுல் காந்தி மீது ஸ்மிருதி இராணி சபாநாயகரிடம் புகார்

# ஓணம் பண்டிகை: ஆகஸ்ட் 29ஆம் தேதி சென்னை மாவட்டத்திற்கு விடுமுறை





# மதுரையில்: அதிமுக மாநாட்டிற்கு பாதுகாப்பு வழங்கிட ஐகோர்ட் உத்தரவு

சென்னை / புதுக்கோட்டை | 10.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**வி. வி. கிரி** , இந்தியாவின் 4வது குடியரசுத் தலைவர் (பி.1894) (இ.1980)



**சாவி** , தமிழக எழுத்தாளர், இதழாசிரியர் (பி.1916) (இ.2001)



**கண்பத்ராவ் தேஷ்முக்** , இந்திய அரசியல்வாதி (பி.1926)



**க. துரைரத்தினம்** , இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி.1930) (இ.1995)



## இன்றைய நினைவு நாள்

**இராபர்ட் காடர்ட்** , அமெரிக்க இயற்பியலாளர் (பி.1882) (இ.1945)



**பி. சி. அலெக்சாண்டர்** , இந்திய அரசியல்வாதி (பி.1921) (இ.2011)



**கத்லீன் ஒல்லரென்ழ்சா** , ஆங்கிலேயக் கணிதவியலாளர், வானியலாளர், அரசியல்வாதி (பி.1912) (இ.2014)

